RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s78

# அப்பா வாசம் சிறுகதைத் தொகுப்பு காட்டும் பல்வேறுபட்ட மனிதர்களின் மனவுணர்வு சார்ந்த பண்பு வெளிப்பாடுகள்

**இரா. சூர்யா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜி.டி.என். கலைக் கல்லூரி (தன்னாட்சி), திண்டுக்கல்-624005, தமிழ்நாடு, இந்தியா.

# Psychological Characteristic Expressions of Different Human Beings as Shown in the Collection of Short Stories ‘Appa Vaasam’

**R. Surya** [a, *]

[a] Department of Tamil, GTN Arts College (Autonomous), Dindigul-624005, Tamil Nadu, India

* Corresponding Author: suryapakalavan@gmail.com

Received: 18-12-2021
Revised: 17-04-2022
Accepted: 25-04-2022
Published: 13-07-2022

Check for updates

**ABSTRACT**

The literary form of the short story is one of the most creative literary forms in today's literary world. The short story is the most appropriate literary form that is very easy to explore social issues. The short story format is optimal for recording thoughts like characteristics, behaviors, feelings, psychology, etc of an individual. In that aspect, Meenasunder's short story collection 'Appavasam' registers several community-based issues. In these community-oriented stories, much space is given to individual feelings. It gives prominence to individual sense and behavioral characteristics. It refers to individual psychological messages as well. In this way, the study sets out to record the traits and qualities of human beings that are manifested due to human mental perceptions in the collection of short stories ‘Appa Vaasam’ based on diverse research sites. On behalf of the Adithravidar Welfare Department of the Government of Tamil Nadu, under the Arts and Culture Division, the work was selected as the best work of the year 2010 and awarded the prize-winning work.

**Keywords:** Psychology, Literary, Community, Characteristic

## முன்னுரை

இலக்கியம் என்பது வாழ்வைப் பதிவுசெய்வது, வாழ்வின் ஒவ்வொரு நகர்தல்களையும் காட்சிப்படுத்துவது, மனிதர்களின் பல்வேறுபட்ட பண்புகளை வெளிக்காட்டுவது, சமூகப் பிரச்சனைகள, சிக்கல்களைச் சுட்டுவது, ஏதோ ஒரு வகையில் பிரச்சனைக்குத் தீர்வுக்காணத் துடிப்பது அல்லது தீர்வை முன் மொழிவது. அந்த வகையில் தற்காலப் படைப்புகளான நாவல், சிறுகதை போன்றவைகள் உலக இயக்கத்தின் பல்வேறுபட்ட பிரச்சனைகளை வெளிக்காட்டி வருகின்றன. தனிப்பட்ட மனித வாழ்வில் இருந்து ஒட்டுமொத்த சமூகம் வரையிலும் பல்வேறு பொருண்மையில் சிறுகதை படைப்பாக்கம் பெறுகிறது. நாவலைப்போன்று பெரிய களம் சிறுகதைக்கு இல்லை என்றாலும் நாவல் பேசக்கூடிய அனைத்துக் கூறுகளையும் சிறுகதை பேசுகின்றது. சிறுகதையில் வர்ணனைக்குப் பெரிய இடம் இல்லை என்பதால் வாழ்க்கையில் நிகழக்கூடிய பிரச்சனைகள் மற்றும் சிக்கல்களைப் பதிவு செய்ய உகந்ததாகச் சிறுகதை உள்ளது (Tamilannal, 2013).

## மன உணர்வு - உளவியல்

மனித மனதின் உணர்வுகள் மாறுபட்டவை. மனிதனின் பண்புகளை வெளிக்காட்டுவது மனதின் உணர்வுகளே. மனிதனின் உணர்வுகள் நிலைபெற்று விளங்கும். சூழலுக்கு ஏற்றபடி மாற்றமும் பெறும். மன உணர்வு என்பது மனிதனின் எண்ணவோட்டங்கள் அன்றி வேறெதுவும் அன்று.

“வாழ்க்கையின் பேரில் ஒருவரது பார்வை மற்றவரிடமிருந்து வேறுபடும். நம்பிக்கையின்மையிலிருந்து நன்னம்பிக்கை வரை மாறுபடும். இத்தகைய மனப்பான்மை அவரது இயல்பு (Temperament) என்று பொதுவாகக் குறிப்பிடப்படும். இந்த இயல்பிலேயே ஒரு சிலர் தொடர்ந்து ஒரே நிலையில் இருப்பதையும் வேறு சிலர் அவ்வப்போது மாறுபடுவதையும் காணலாம்” அந்த வகையில் மனித மன உணர்வுகளே ஒருவரின் நடத்தை, பண்பு நலன்களைத் தீர்மானிக்கிறது. மனம் என்பது உளவியல் சார்ந்தது. ஆகையால் அப்பா வாசம் சிறுகதைத் தொகுப்பினுள் உள்ள சிறுகதைகளில் மனித மன உணர்வின் மூலம் வெளிப்படும் பண்புகளை இவ்வாய்வு உளவியல் துணைகொண்டு முன்வைக்கின்றது (Sundara Srinivasan, 2019).

உளவியல் என்பது வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். இதனால் உளவியலுக்கென்ற திட்டவட்டமான வரைவிலக்கணத்தைக் கூறிவிட முடியாது. என்றாலும் உளவியலுக்கான பிராய்ட், யுங், லக்கான் போன்றோர் கூறிய கருத்துக்களை உளவியலுக்கான வரையறைகளாக எடுத்துக் கொள்ளலாம். அகராதிகளைக் கொண்டு பார்க்கும் பொழுது “மனித மனம் செயல்படுவதைக் குறித்தும், மனதின் வெளிப்பாடுகளான நடத்தை, குணம் குறித்தும் ஆராயும் (அறிவியல்) துறை psychology” எனவும் The Sience of the mind - மனதத்துவ சாஸ்திரம்” எனவும் பொருள் கூறப்படுகின்றது (Kriya, 2004).

## ஆட்டம்

‘ஆட்டம்’ என்ற சிறுகதையில், படித்த பெண்ணான சகுந்தலா தான் திருமணமாகி வந்த ஒரு கிராமத்தில் நிகழும் மூடநம்பிக்கையான சாமி வந்து ஆடுவதைக் கண்டு வருத்தப்படுகின்றாள் . அதே சமயம் சாமி ஆடும் பொழுது நிகழும் செயல்களைக் கண்டு எள்ளி நகைக்கிறாள். அந்தப் பெண்ணின் கணவர் ஒரு குடிகாரராக இருப்பது அந்தப் பெண்ணுக்கு மிகவும் வருத்தம் தருகிறது. அவளின் கணவன் அந்தப் பெண்ணிடம் பலமுறை நான் இனி குடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்கின்றான். ஆனால் அவன் குடிப்பதை நிறுத்தவில்லை இதனால் வருத்தம் அடைந்த அப்பெண் ஒருநாள் கணவன் குடித்துவிட்டு வந்தபொழுது தனக்குச் சாமி வந்தது என்று ஆட ஆரம்பித்துவிட்டாள். அந்த ஊர் மக்கள் சாமி வந்து ஆடுபவர்கள் என்ன சொன்னாலும் அப்படியே கேட்பார்கள் என்பதைக் கண்ட அவள் தன் கணவனைத் திருத்த அந்த வழியைக் கையிலெடுக்க, சாமி வந்து ஆடும் பெண்கள் எப்படியெல்லாம் ஆடுவார்கள் என்பதை அறிந்து வைத்திருந்தாள். அதுபோன்றே தனக்குச் சாமி வந்தது என்று ஆடினாள். சாமி வந்து ஆடுபவர்கள் எவ்வாறு பேசுவார்களோ அவ்வாறே அவளும் பேசினாள்.

“இத இப்படியே விடக்கூடாது... இதுக்கு ஒரு முடிவு கட்டனும்

நினைத்தவளுக்கு மனசுக்குள் மின்னலடித்தது

ஓஓஓ...வென ஊர் அதிர ஒரு கூக்குரல் போட்டாள். எல்லாரும் தலைதெறிக்க ஓடிவந்தார்கள். கொஞ்ச நேரத்தில் கூட்டம் கூடிற்று.

நான்தான் மின்னடியம்மா வந்துருக்கேன்டா” (Meena Sunthar, 2011)

என்றவள் சாமியாட்டம் ஆடத்துவங்கினாள். தன் மனதின் ஆதங்கத்தை, வருத்தத்தை வெளிப்படுத்த அவளுக்கு அவ்வாறு எண்ணம் உருவாகியுள்ளது. மூடத்தனமாகவும் அசிங்கம் என்றும் எண்ணிய ஒரு செயலை, சூழல் காரணமாக அவளின் மனது செய்யத் தூண்டியது. இச்செயலின் வாயிலாக அவளின் ஆழ்மான உளவியல் வெளிப்படுகிறது.

## மரம்

‘அப்பா வாசம்’ என்ற சிறுகதையில் சாந்தமூர்த்தி என்பவர் தன் வீட்டின் முன்பு அப்பா நட்டு வைத்த மரத்தையே தனது அப்பாவாக எண்ணினார். தனது அப்பா இறந்து பல ஆண்டுகள் ஆனாலும்

அவர் நட்டு வைத்த மரங்களில் அவர் வாழ்வதாக எண்ணி இருந்தார். திடிரென்று அவரின் அம்மா ஊருக்கு அழைத்து அப்பா நட்டுவைத்த மரத்தை வெட்டிய செய்தியை வருத்தத்துடன் சொன்னதும் சாந்த மூர்த்தி உடைந்துப்போய் விட்டார்.

"அப்பா மரம் அடியோடு வெட்டப்பட்டு, மண்தரை காயமுற்று கிடந்தது. சாந்தமூர்திக்கு அப்பா கொலையுண்டு கிடப்பது மாதிரி தோன்றியது." (Meena Sunthar, 2011)

என்று சாந்த மூர்த்தியின் மன நிலையை ஆசிரியர் பதிவு செய்கின்றார். சாந்தமூர்த்தியின் நிலை உணர்ந்த அவரின் தாய், அப்பாவின் மரம் எங்கும் போகவில்லை இங்கேதான் இருக்கிறது என்று மரத்தில் இருந்து எடுத்த விதைகளில் உருவான செடிகளைக் காட்டி மகிழ்கிறார்.

உடைந்த மண்பானை, கரிச்சட்டி போன்றவைகளில் செழித்து வளர்ந்திருந்த வேப்பங்கன்றுகள் காற்றில் மெலிதாய் ஆடின.

அப்பா சிரித்து தலையாட்டுவது போலிருந்தது சாந்தமூர்த்திக்கு" (Meena Sunthar, 2011)

என்று சாந்தமூர்த்தியின் மன உணர்வுகளை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

## ஐயா

'ஐயா' சிறுகதையானது, ஐயா என்ற ஒற்றைச்சொல் மதிப்பையும், சாத்திய ஒடுக்குமுறையின் தன்மையையும் ஒருசேர வெளிப்படுத்தும் சொல்லாக அமைந்துள்ளதைப் பதிவு செய்கிறது. சண்முகநாதன் என்ற மாணவன் ஐயா என்ற சொல்லினைச் சொல்லத் தயக்கம் காட்டுகின்றான். ஆனால் அவனது தமிழ் ஆசிரியர் ஐயா என்றுதான் அழைக்க வேண்டும் சார் என்று அழைக்காதே என்கிறார். சண்முகனாதனோ ஐயா என்று அழைக்கும் போது தன் அப்பா பணிபுரியும் முதலாளிதான் நினைவுக்கு வருகிறார் என்றும், அம்முதலாளியின் மோசமான குணத்தையும், அவர் தன்னுடைய அப்பாவை நடத்தும் விதத்தையும் பற்றி ஆசிரியரிடம் கூறுகிறான். அந்த முதலாளியை என் அப்பா ஐயா என்றுதான் அழைப்பார். எனவேதான் அந்தச் சொல்லை என்னால் சொல்ல முடியவில்லை என்கிறான். அதற்கு அவனின் ஆசிரியர் ஐயா என்ற சொல்லின் பொருளை விளக்கி இவ்வாறு சொல்லுகிறார்.

"இங்க பாரு இதுக்கு பேரு தமிழ் அகராதி... தமிழ்ல உள்ள அத்தனைச் சொல்லுக்கும் இதுல சரியான அர்த்தம் இருக்கு... இதுல ஐயாங்குறதுக்கு நேரா என்ன போட்டிருக்கும்னு பாரு" கை வைத்துக் காட்டினார்.

பார்த்தேன்

ஐயா - மரியாதைக்குரியவர்களை அழைக்கப் பயன்படுத்தும் சொல் என்றிருந்தது

நான் ஐயாவைப் பார்த்தேன்

மொதலாளின்னு அர்த்தம் போட்டிருக்கா?"

இல்லை என்று தலையாட்டினேன்

"நான் மரியாதைக்குரியவனா இல்லையா?" (Meena Sunthar, 2011)

என்று ஆசிரியர் கூறியதிலிருந்து சண்முகநாதன் மனம் பெரும் மாறுதல் அடைந்தது. அன்று முதல் அவன் யாரைக்கண்டாலும் ஐயா என்று அழைக்கத் தொடங்கினான். வங்கி மேலாளராக வாழ்வில் உயர்ந்த பின்னரும் 'ஐயா' என்ற சொல்லை விடவில்லை ஐயா என்று அழைப்பதால் பிறர் தன்னை வித்தியாசமாகப் பார்ப்பதை உணர்ந்த பொழுதும் 'ஐயா' என்று அழைப்பதை மாற்றிக்கொள்ளவில்லை. ஒருச் சூழலில் சண்முகநாதன் காட்சி ஒன்றைப் பார்க்கின்றார். அங்கு வெங்கடாசலம் என்பவர் வடிவேலுவை மிரட்டுவதைப் பார்க்கிறார். வெங்கடாசலம் வடிவேலுவிடம், உன் மகன் படிச்சவன் என்ற திமிரில் நடப்பதாகவும் எதன்னை யாரும் ஐயா என்று அழைக்கக் கூடாது என்றும் மக்களிடம் சொல்றானாம். ஒரு நாள் என்கிட்ட நீ வேலைக்கு வரலைனா சாப்பாட்டுக்கே வழி

இல்லாத உன் மகன் எப்படிப் பேசுகிறான்? என்று திட்ட, வடிவேலு அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சுகிறார். அதற்கு வெங்கடாசலம், வங்கி மேளாலரே என்னை ஐயானுதான் அழைப்பார். உன் மகன் என்ன அவரைவிடப் பெரியவனா என்று கூறியவற்றை எல்லாம் சண்முகநாதன் கவனித்தார். வங்கிக்குள் வெங்கடாசலம் வடிவேலுவையும் அழைத்துக்கொண்டு செல்ல, அவர்களைப் பார்த்த சண்முகனாதன் அவரை அழைத்த விதத்தைக் கண்டு அவர் மட்டுமன்றி வங்கியில் இருந்த அனைவரும் அதிர்ச்சிக்கே உள்ளாகினர்.

"சண்முகநாதன் ஐயாவிடம் மனசுக்குள்ளயே மானசீகமாக ஒரு மன்னிப்பு கோருகிறேன்.

வாங்க வெங்கடாசலம் சார்... உட்காருங்க!" என்கிறேன். முகம் இருள்கிறது. விழிகள் பிதுங்குகின்றன. ஓர் அதிர்வோடு வெங்கடாசலம், சக ஊழியர்கள் உட்பட வங்கியே இப்போதும் வித்தியாசமாகவே பார்க்கிறது" (Meena Sunthar, 2011).

இவ்வாறு சண்முகநாதனின் மன உணர்வுகளின் காரணமாகச் செயலிலும், பண்பிலும் மாற்றம் ஏற்படுகிறது. 'ஐயா' என்ற சொல் அவரின் மன உணர்வை எந்த அளவு பாதித்தது, அச்சொல் அவரிடம் ஏற்ப்படுத்திய பல்வேறு உளவியல் தாக்கங்கள் போன்றவை அவரின் செயல்பாடுகளின் வாயிலாக வெளிப்படுகின்றன.

## சுப்புனி

'சுப்புனி' என்பவன் புண்ணிய மூர்த்தியின் வீட்டின் பணியாள். காளைகளைப் பராமரிப்பது அவனின் முக்கியப்பணி. புண்ணிய மூர்த்தியின் காளைகள் அவரின் எதிரியான கோபாலின் வயலில் மேய்ந்து சேதப்படுத்தின. அதனால் கோபம் கொண்ட கோபால் புண்ணிய மூர்த்தியைத் திட்டுகிறான். அதனால் ஆத்திரம் அடைந்த புண்ணிய மூர்த்தி சுப்புனியை திட்டுவதில்லாமல், காளைகளை விற்க முடிவுசெய்கிறார். காளைகளின் மீது மிகுந்த அன்பு கொண்ட சுப்புனி அதனை மறுக்கிறான். அதனை எல்லாம் பொருட்படுத்தாத புண்ணிய மூர்த்தி காளைகளை விற்றுவிடுகிறார். காளைகளும் சுப்புனியை பிரிய மறுக்கின்றன. காளைகளை விற்றதில் இருந்து சுப்புனி புண்ணிய மூர்த்தியிடம் பணிக்குச் செல்லவில்லை. சுப்புனி வராததால் அவனை ஆள் விட்டு அழைத்துவரச் செய்தார் புண்ணிய மூர்த்தி. சுப்புனியிடம் ஏன் பணிக்கு வரவில்லை என்று கேட்கிறார். அதற்கு சுப்புனி,

"ரெண்டு உசுருங்களோட பாசத்துக்கு முன்னால என்னால கூலிக்கு மாரடிக்க முடியலங்கய்யா... என்ன மன்னிச்சிடுங்க. மாடு வாங்கிட்டுப்போன பக்கத்து ஊர் பண்ணைல நான் வேலக்கி சேந்துட்டன். இங்கிருந்து ரெண்டு கிலோ மீட்டர் நடந்துதான் போறேன்னாலும் அது மனசுக்கு நிம்மதியா இருக்கு. நெறவாவும் இருக்கு. நீங்க வேற ஆள பாத்துக்கங்க." என்கிறான். காளைகளின் மீது கொண்ட பாசமும், அவ்வளவு சொல்லியும் மாடுகளை புண்ணிய மூர்த்தி விற்று விட்டாரே என்ற எண்ணமும், காளைகளைப் பிரிந்த தவிப்புமே மீண்டும் சுப்புனியைப் புண்ணிய மூர்த்தியிடம் பணிக்கு வரவிடாது மாடுகள் இருக்கும் இடத்திற்குப் போகச் செய்தது.

## வேர்

வேர் சிறுகதையில், அங்குசாமி தந்தை இறந்து சிறிது காலத்திலேயே தாயும் இறக்கும் நிலையில் இருக்கிறாளே என்று வருந்துகிறார். உடல் நிலை மோசமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அங்குசாமியின் தாய் இன்னும் மூன்று மணிநேரத்தில் இறந்து விடுவார் என்று மருத்துவர் சொன்னதும் அங்குசாமி மிகுந்த வருத்தம் அடைந்தார். தன் தந்தையின் இறப்பு குறித்தும் இறப்பின் போது நிகழ்ந்தவற்றையும் அந்நிகழ்வில் அங்குசாமியின் அண்ணன்கள் மற்றும் அண்ணன் மாணவிகள் நடந்துக்கொண்ட விதத்தையும் சுப்புனி இப்போது நினைத்துப் பார்க்கிறார். அம்மா இறக்கப் போகிறார் என்பதை அங்குசாமியால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. மருத்துவர் அங்குசாமியின் அம்மாவை வீட்டிற்குக் கொண்டு செல்லலாம் என்று கூறிவிட்டார். அம்மாவை எண்ணி ஏங்கும் அவருக்கு யாரோ சொன்னது காதில் விழுந்தது, திருச்சிக்குக் கொண்டு சென்றால் காப்பாற்றி விடலாம் என்றார்கள். அங்குசாமியின் அம்மாவை வீட்டிற்கு அழைத்துச்

சென்றார்கள். அப்போது அங்குசாமி அம்மாவைத் திருச்சிக்கு அழைத்துச் செல்லலாம் என்று கூற, திருச்சிக்குச் சென்றனர். செல்லும் வழியிலேயே அவரின் அம்மா இறந்துவிட்டார். அப்போது அவருடன் சென்றவர்கள் அவரைத் திட்டுகின்றனர். வேதாச்சலம் என்பவர் அவரிடம் டாக்டர் அவ்வளவு சொல்லியும் எதற்குத் திருச்சிக்குச் செல்ல வேண்டும் வீண் செலவுதான், அப்படி என்ன உனக்கு ஒரு குறுக்கு புத்தி என்று குறிப்பிட, அப்போது அங்குசாமி குறிப்பிடும் சொற்கள் அவரின் மன உணர்வுகளை வெளிக்காட்டுகின்றன.

"டாக்டரே சொன்னபிறகும் உனக்கு என்ன புத்தி பேதலிச்சிப் போயிட்டா? என்று வாய்க்கு வந்தபடி அண்ணன்கள் மாறி மாறி என்னை வசைபாடினார்கள்.

நான் துக்கத்தை அடக்க முடியாமல் உடைந்த குரலில் சொன்னேன்.

காசு பணத்தை சம்பாரிச்சிடலாம். யாரோ திருச்சிக்கு கொண்டு போனா காப்பாத்திடலாம்னு சொன்னதைத் தவிர்த்து என்னால வீட்டுக்கு வர முடில... நாம முயற்சி பண்ணிருந்தா அம்மா பொழச்சிருக்குமோன்னு எப்பவாவது மனசு குறுகுறுக்க ஆரம்பிச்சிட்டா... காலகாலத்துக்கும் என்னால நிம்மதியா வாழ முடியாது... அதான் அப்படி நடந்துகிட்டேன். அதற்கு மேல் என்னால் பேசமுடியவில்லை" என்று சொன்ன அங்குசாமியின் மன உணர்வுகள் அவருக்கு ஏற்பட்ட உளவியல் தாக்கத்தை காட்டுகின்றது.

## முடிவுரை

'அப்பா வாசம்' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் அனைத்தும் சமூகப் பார்வை கொண்டதாக விளங்குகின்றன. சமூகத்தில் நடக்கும் பிரச்சனைகள் இன்னல்களைச் சுட்டிக்காட்டுகின்றன. சாதிய வன்மம், மனிதர்களின் வக்கிரத்தன்மை, உழைப்புச் சுரண்டல், ஏக்கம், பெண்ணியம், இரக்கம், குற்றவுணர்வு எனக் கதைகள் மனித மன உணர்வுகளை மையப்படுத்தியே அமைந்துள்ளன. சிறுகதைகள் சமூகப்பார்வை கொண்டு விளங்கினாலும் தனிமனித மன உணர்வுகளுக்கு முக்கிய இடம் தருபவையாக உள்ளது.ன. தனிமனிதப் பண்புகளைச் சுட்டும் கதைகளாகவே பெரும்பாலும் கதைகள் அமைந்துள்ளன. தொகுப்பில் உள்ள சிறுகதைகள் அனைத்திலும் மனித மன உளவியல் கூறுகள் வெளிப்படுகின்றன. 'அப்பா வாசம்' சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள் அனைத்தும் ஏக்கம், நினைவுகள், மன உணர்வுகள் போன்ற உளவியல் தாக்கம் கொண்டவையாக விளங்குகின்றன. வாழ்வியலின் எதார்த்தத்தை சொல்லும் பகுதிகளும், மனிதர்களின் குறுகிய மற்றும் பரந்துப்பட்ட மனதை சொல்லும் பகுதிகளும் கொண்டதாக சிறுகதைகள் உள்ளன. சிறுகதைக்கான வரையறைகள் பிசுகாமல் தொகுப்பு முழுவதும் சுவாரசியமான. அதே சமயம் சிந்தனையை தூண்டும் விதமாக கதைகள் அமைந்திருந்தாலும், அனைத்து சிறுகதைகளின் முடிவுகளும் திரைப்பட கதைச்சொல்லும் பாணியை ஒத்தேக் காணப்படுகின்ற. இந்த தன்மையானது சிறுகதையினை படிப்போருக்கு சுவாரசியத்தை தந்தாலும், ஒரேமாதிரியான கதைநகர்த்தலை போன்று தோற்றம் தருகிறது. சமூகத்தில் ஏர்ப்படக்கூடிய பிரச்சனைகளுக்கும் சிக்கல்களுக்கும் தனிமனித எண்ணங்களே காரணமாக அமைகின்றன. தனிமனிதனின் மன உணர்வுகளுக்கு ஏற்ப பண்புகளில் மாற்றம் ஏற்படுவது இயல்பாகும். அவை மனித மனதின் உளவியல் தாக்கத்தை பொருத்தும் அமைகின்றது. தனிமனித உணர்வுகளுக்கும் பண்புக்கும் வாழ்வியல் மாற்றத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. குழுவாக வாழும் மனித சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் என்று தனிப்பட்ட மன உணர்வுகளும், எண்ணங்களும் உண்டு. அதன் அடிப்படையில் மனிதர்களிடையே பண்புகளில் வேறுபாடு காணப்படுவது இயல்பாகும். மனிதர்களின் ஒழுக்கம், நடத்தை, பண்புகள் ஆகியவைகள் வாழ்க்கைச்சூழல், பழக்கவழக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தாலும், மனிதர்களின் மனதில் ஏர்ப்படக் கூடிய மன உணர்வுகள் மற்றும் உளவியல் தாக்கங்கள் பண்புகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. சமூகத்தில் ஏற்படக் கூடிய பிரச்சனைகளுக்குத் தனிமனிதனின் மன உணர்வுகளும், உளவியல் தாக்கங்களும் முக்கிய காரணமாக விளங்குகின்றன.

## References

Kriya, (2004) Kriyavin Tarkalat Tamil Akarati, Kriya, Chennai, India.

Meena Sunthar, (2011) Appa Vasam, Palam Velliyedu, Chennai, India.

Sundara Srinivasan, S., (2019) Aalumai Mempaadu, Tamarai Pathippagam, Chennai, India.

Tamilannal, (2013) Pudumai Nokkil Thamizh Ilakkiya Varalaru, Meenachi Puthaga Nilaiyam, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License